# அருளமுதம்

(இசைப்பாடல்கள்)



வெளியீடு

வட்டுக்கோட்டை

தமிழ் இலக்கிய மன்றம்

# அருளமுதம்

## [இசைப் பாடல்கள்]

யாழ்ப்பாணம்
வட்டுக்கோட்டையூர்
சந்தக்கவி, கலைவாரிதி,
கலாபூஷணம். நா.புவனசுந்தரம்

வெளியீடு:
வட்டுக்கோட்டை
தமிழ் இலக்கிய மன்றம்

## நூல் பற்றிய தரவு

நூலின் பெயர்: அருளமுதம்

ஆசிரியர்: நாகலிங்கம் புவனசுந்தரம்

வெளியிடுவோர்: வட்டுக்கோட்டை தமிழ் இலக்கிய மன்றம்

மொழி: தமிழ்

பதிப்பு: 2009

வெளியீடு: 2009.02.17

பதிப்பகம்: ஸ்ரீவிநாயகர் அச்சகம், வழக்கம்பரை, தொல்புரம்.

பிரதி: 100

விலை: 65/-

# சமர்ப்பணம்



திருவாட்டி
வர்ணகுலவதி சண்முகவடிவேல்

அன்பெனுந் தேனெடுத்தே ஆசாரப் பால்கலந்து
நன்றுறவே நாம்வாழ ஊட்டிவைத்தாய் - இன்பு மலி
அக்காநின் ஆர்கழற்கே இந்நூல் எடுத்துயான்
பக்தியுடன் சேர்த்தேன் பணிந்து

# உள்ளுறை

நூலாசிரியர் நுவலல்
1. விநாயகப் பெருமான்
2. பிங்கல மோதக மாமரப் பிள்ளையார்
3. வட்டூர் தில்லையம்பலப் பிள்ளையார்
4. கலைவாணி
5. விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதர்
6. கூத்தப் பெருமான்
7. முத்துமாரி அம்பாள்
8. முத்துமாரித்தாய்
9.வீயோடை முத்துமாரி
10. காங்கேயன் வளவு முத்துமாரி
11. நல்லைக் கந்தன்
12. வெப்பட்டியொல்லை செந்தில் முருகையா
13. எமையாளும் ஐயன்
14. வன்னியன் தோட்டம் சின்னக் கதிர்காமத்தையன்
15. வைரவக் கடவுள்
16. புயங்கொல்லை முருகஞான வைரவர்
17. பிராட்டிவளவு ஞான வைரவர்
18. கம்பம்புலோ ஞானவைரவர்
19. மணியன்தோட்டம் வீரபத்திரர்
20. கணவன் தோட்டம், காளியன் ஒல்லை மாகாளி
21. வட்டு மேற்கு பூதராயர்

பிற்சேர்க்கை

01. சூரன்போர்க் காட்சி
02. உயிரைப் படைத்த பெருமான்
03. தைப்பொங்கல்
04. விடியல் கொண்டு வாராயோ
05. பாதகர் என்றே பகர்
06. வாழ்வியல்

# நூலாசிரியர் நுவலல்

சைவமும் தமிழும் இருகண்களெனக் காத்து ஓம்பிவரும் கிராமங்கள் யாழ்நாட்டில் பலவுள. அவற்றுள் வட்டுமாநகரில் அமைந்துள்ள சிவபுரமும் ஒன்றாகும்.

விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதப் பெருமான் இங்கே அருளாட்சி புரிந்து அடியவர்களைப் புரந்து வருவதினாற் காலத்திற்குக் காலம் பல்லான்ற கேள்விப் பயனுணரும் அறிஞர்களும் செந்தமிழ் நூல்களே செல்வமெனக் கொண்ட புலவர்களும் தோன்றிச் சைவத்தினையும் செந்தமிழ் மொழியினையும் வளர்த்து வந்துள்ளனர். இவர்கள் இட்ட உரத்தினால் எங்களூர் ஆலயங்கள் பலவழிகளில் உயர்ச்சி கண்டன.

அந்த வகையில் ஆலயங்களில் பத்திப் பனுவல்களாக அகவல்,ஊஞ்சல், பதிகம், மும்மணிமாலை, நான்மணிமாலை, பிள்ளைத்தமிழ், சதகம், அந்தாதி, தலபுராணமெனப் பலவகைப் பாடல்கள் எழுந்தன. இவ்வாறான அருமையான பாடல்கள், நம்மிடம் இருப்ப அவற்றை விடுத்துப் பிற ஆலயங்கள் மேற் பாடப்பட்ட பாட்டுக்களைக் கொண்டு வந்து இறுவட்டுக்கள் மூலம் இங்கே இசைக்கப்படுவதைக் கேட்டு வந்த என் மனத்தினிலே எங்களூர் ஆலயங்களிலும் தனித்தனியே ஒவ்வொரு ஆலயத்திற்கும் பக்திப் பாடல்கள் இறுவட்டுக்களில் எடுக்கவேண்டுமென எண்ணம் எழுந்தது. இந்த மனமுயற்சி காரணமாக யான் எங்கள் ஊரிலுள்ள ஆலயங்கள் சிலவற்றிற்குப் பக்திப்பாடல்கள் பாடி வைத்திருந்தேன். இதைக் கேள்விப்பட்ட எங்கள் வட்டுக்கோட்டைத் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் திரு.அ.அரியரத்தினம் J.P அவர்களும் வெப்பட்டியொல்லை செந்தில்முருகையாதேவஸ்தானத்தைச்சேர்ந்த திரு.பொ. சண்முகானந்த-சிவம் ஐயா அவர்களும் எனது இல்லத்திற்கு வருகை தந்து பாடல்களைப் பார்த்துப் பரவசமடைந்து அச்சுவாகனமேற்றி ஒரு நூலாக வந்தால் பலரும் பயன் பெறுவார்களெனக் கூறி நூலுருவில் வர என்னை ஊக்குவித்த அந்தப் பிறர்நலம் போற்றும் அருளறம் வாய்ந்த அவர்களுக்கும் இந்நூலினைச் சிறந்த முறையில் குறைந்த செலவில் அச்சிட்டுதவிய வழக்கம்பரை ஸ்ரீ விநாயகர் பதிப்பகத்தாருக்கும் மற்றும் மூலத்தினையும் அச்சுப் பிரதிகளையும் ஒப்புநோக்கிச் சரவை பார்த்துதவிய பௌராணிகர், கலைவாரிதி, திரு.வே.பேரின்பசிவம் அவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க சிவசமயம் வளர்க தமிழ்மொழி

**நாகலிங்கம் புவனசுந்தரம்**

**சிவபுரம்**
வட்டுக்கோட்டை
01.02.2009

உ
சிவமயம்



# 1.விநாயகப் பெருமான்

தும்பி முகவனைத் தோத்தரித்தே நின்றோர்க்கு
நம்பி பெருநலம் நல்குவனால் - தம்பியாங்
கந்தனைக் காத்திடற்காய் கானிலன்று வந்தவன்தாள்
புந்தியில் வைப்போம் புரிந்து

வட்டுக்கோட்டை

# 2. அருள்மிகு பிங்கல மோதகமாமரப் பிள்ளையார்

-பல்லவி-

2. தூது செல்லாயோ -- குயிலே
தூது நீ செல்லாயோ

- அநுபல்லவி --

மோதக மாமரப் பிள்ளையார் - இங்கே
மொழிந்திட வந்து அருளது பொழிந்திட

(தூது செல்லா........)

-சரணம்-

வட்டூர் களவியோடை -- வள்ளல்
வண்ண மாநிழலின் - கீழே
பெட்புடன் வீற்றிருக்கும் - அவரிடம்
போய்நீ அருளது பொழிந்திட -- வாவென்று

(தூது............) 1-

3. சித்தி கலைஞானம் - செல்வம்
பக்தி ஒழுக்கம் - பண்பு
நித்தம் சிறந்திடவே -- நீயும்
நேரிற் சென்றருள் பொழிந்திட -- வாவென்று

(தூது.........) 2

4. முருகுப் பிள்ளையெனும் - முன்னவன்
உருகித் தொழுதிட்டே -- வேண்ட
அரிய அவர்கோயில் - அமர்ந்தே
ஆட்சி செய்யும் ஐயனை வாவென்று

(தூது.........) 3

5. வித்தகச் செட்டிக்காய் - விரும்பி
வனத்தே சென்றிட்ட -- அந்த
மத்தளக் குட்டியினை - இங்கே
மக்க ளிதய மன்றினி லாட

(தூது.........) 4



வட்டுக்கோட்டை வடக்கு அருள்மிகு

## 3. தில்லையம்பலப்பிள்ளையார்.

பல்லவி

தில்லை யம்பலப் பிள்ளை யாரே – எங்கள்
அல்லல் தீர்க்கும் அரும ருந்தே

சரணம்

6. நாக நாதர் நங்கள் நம்பி
வாகையாக வடித்த தளியில்
ஓகையோடு ஆட்சி ஓச்சி
ஓம்பும் ஓங்கல் ஒற்றைக் கொம்பன் (தில்லை.....)1

7. வல்ல வினைகள் வீட்டி நாமும்
வளமாய் வாழ வட்டூர் போந்தீர்
அல்லும் பகலும் அருகில் இருந்தே
அணைத்துக் காக்கும் ஆதி முதலாம் (தில்லை.....)2

8. அன்பும் அறமும் அருளும் ஓங்கிட
இன்பும் ஈகையும் என்றும் நிலைத்திட
நன்மை நின்று நாளும் பெருகிட
தொன்று தொட்டு ஏத்தித் தொழுதிடும் (தில்லை.....)3

9. தந்தையும் தாயும் தரணியிற் பெரியர்
இந்த உண்மையை உலகிற் கியம்பிட
வந்துன் அம்மை அப்பரை வலமாய்
எந்தைநீ சுற்றிப் பெற்றனை மாங்கனி (தில்லை.....)4

உ



# 4. கலைவாணி

10. பேசுஞ் சிலைதருஞ் சிற்பியின்
பொலன்கை தனிலேயும்
தேசுடை நடமாடுந்தையலர்
விழிதனி லேயும்
ஆசு கவிநா வினிலும்
நடமாடி அருளொளி
வீசும் வெண்டா மரைவாணி
நின்பாதம் அடைக்கலமே.



வட்டுக்கோட்டை கொள்ளோலை
**அருள்மிகு விசாலாட்சி சமேத விசுவநாத சுவாமிகள்**

## வட்டுக்கோட்டை கொள்ளோலை

# 5. அருள்மிகு விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதர்

**பல்லவி**

சிவனிருக்கப் பயமேனடா – எங்கள்
சிந்தையில் குடிகொண்ட எந்தை – விசுவேசர்

**அநுபல்லவி**

தாயார் விசாலை உடனிருந்தருள
சேயெமை நாளும் காத்திடும் -சேயோன்

(சிவனிருக்கப்.............) 1

**சரணம்**

11.பாடும் பூங்குயில் நாடி இசைத்திடும்
ஆடும் மயிலினம் தேடி அகவிடும்
கோடி அடியவர் ஓடி வந்து
கூடித் துதிக்கும் கொள்ளோ லைப்பதி

(சிவனிருக்கப்.............) 2

12. வீசு நற்புகழ் விசாலைத் தாயொடு
காசியில் இருந்து கங்கா தரனார்
தேசுயர் வட்டுர் திருத்தளி போந்தே
நேசமாய் இன்னருள் நித்தலும் நல்கும்

(சிவனிருக்கப்.............) 3

13. அருளது பொழிந்து இருளது போக்கி
பொருளொடு போகம் பெருகிட ஈந்தே
குருவடி வாகி உருகிட அடியர்
எருதினில் ஏறி வருமொரு ஈசன்

(சிவனிருக்கப்.............) 4

14.. குன்றாச் செல்வமும் குறைவிலா வாழ்வும்
நன்றுறத் தந்தெம் இதயத் தாமரை
மன்றினில் ஆடும் மாமணிக் கூத்தன்
நின்றருள் புரிவான் என்றும் நல்வாழ்வு

(சிவனிருக்கப்.............) 5

15. துன்பந் துடைத்தே இன்பம் ஈந்து
அன்பர்க் கருளும் ஆதி முதலே
இன்பே செய்யும் இறைவா உன்றன்
பொன்னடிப் போது போற்றி போற்றி

(சிவனிருக்கப்.............) 6



## 6.கூத்தப் பெருமான்

பல்லவி

ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் கூத்தா
ஏனிந்தத் தாமதம் எமைக்காக் கவாரீர் — என்றும்
ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் கூத்தா

அநுபல்லவி

கோடானு கோடி மக்களுனைத் தேடி
நாடோறும் கூடி வருகின்றார் ஓடி

(ஆனந்தத்...............)

சரணம்

16. வான்புகழும் கொள்ளோலை வட்டுர்நற் பதியினிலே
மான்விழியாள் மாதுசிவ காமித்தாய் உடனிருந்தே
தேனேநீ எமைக்காக்கச் சிந்தை கொண்டே நடமியற்றும்
ஆன்றவுன்றன் திருவடித்தா மரை தூக்கி அருளுமெந்தை

(ஆனந்தத் ....) 1

17. பாரேத்தும் நடராசா பாம்புபுலி பார்த்திடவே
ஏராரும் திருப்பாதம் எடுத்து நடம் புரிந்திடுவாய்
ஊராரும் உனைவேண்டி உருகிநித்தம் அழுதிடவே
தீராத நோய்களெல்லாம் தீர்த்தருளும் திகம்பரனே

(ஆனந்தத் .....) 2

18. உலகிலெந்தத் திசைகளிலே ஊரிலுள்ளோர் வாழ்ந்தாலும்
அலகில்லா இடமெல்லாம் ஐயாநீ சென்றங்கே
நலமுடனே காத்தோம்பி நிலமீதில் வாழ்வளிக்கும்
தலமோங்கு கொள்ளோலைத் திருத்தளியில் அருள்புரியும்

(ஆனந்தத்........)3

வட்டூர் வீயோடை இலுப்பையடி

# 7.அருள்மிகு முத்துமாரி அம்பாள்

19. சீரார் சோலைசெறி – வீயோடை
செல்வ முத்துமாரி – அம்மா
ஏரார் வட்டூரில் - விசுவேசர்
இருக்கும் தளியருகில் - அமர்ந்தே
பேரார் கூத்தினொடு – பாட்டும்
பெரிதே உவந்தருளிப் பற்றுடன்
ஊரார் வாழ்ந்திடவே – நீயும்
ஊக்கம் தந்திடுவாய் தேவி
(சீரார்............) 1

20. ஆதவ னெனவந்த – வட்டூர்
ஆதிக் குடிமகனார் - நல்ல
மாதவ சீலரவர் - எங்கள்
மாதாச் சியெனுமையன் - நித்தம்
கோதை மாரியினை – வணங்கிக்
கோயில் தாயார்க்கு – எடுத்து
ஓதித்தேவாரம் - அங்கே
ஒப்பிலாப் பூசை செய்வார்
(சீரார்.............) 2

21. தேடிச் சரணடைந்தால் - அன்னை
தீர்ப்பாள் தீவினைகள் - மெத்த
வாடித் துன்பமிக – உற்றால்
வருந்தாப் பலவழிகள் - வகுத்தே
கூடி எங்களுடன் - வருவாள்
கூத்திற் பிரியமுள்ள – கௌரி
ஓடி ஊரினையும் - காப்பாள்
ஓங்கா ரியெம்மாத்தாள்
(சீரார் ...............) 3

22. என்ன அழகிங்கே – எங்கள்
எழிலார் முத்துமாரி – அம்மன்
பன்ன நல்லநாதன் - சிவனார்
பக்கத் திலேயிருந்து – மோகனப்
புன்னகை பூத்திடவே – மக்கள்
புரிந்த தீவினைகள் போக்கி
இன்புடனே பூமியிலே – என்றும்
இருந்து நீடுவாழ்வார் - தாயே
(சீரார்...............) 4

# 8. முத்துமாரித்தாய்

23. சிங்கார நடையழகி மாரி - வட்டூர்
சிவனாரின் இடப்பாகம் மேவி - என்றும்
மங்காத வீயோடை சூலி — நின்று
மாநிலத்தில் எமைக்காக்கும் நீலி

(சிங்கார...............)1

24. சிங்கத்தின் மீதேறி வருவாள் - புன்
சிரிப்பாலே உலகினையும் ஆள்வாள் - உயர்
புங்கவர்கள் அடிபணிந்தே ஏத்தும் - எங்கள்
பராசக்தி முத்துமாரித் தாயே

(சிங்கார..............) 2

25. பண்ணோடு அடியார்கள் பாட — வந்து
பொன்னோடு போகங்கள் தந்தே — நல்ல
விண்ணோர்க ளாய்மாற்றும் வீரி - எங்கள்
வித்தகியாம் முத்துமாரித் தேவி

(சிங்கார..............) 3

26. மண்மேலே அவள் பார்வை பட்டால் - மக்கள்
நின்மதியாய் நீடூழி வாழ்வர் - நாளும்
கண்ணெனவே காக்குமெங்கள் ஆத்தாள்
கௌரியெங்கள் இலுப்பையடித்தாயே

(சிங்கார..............) 4

27. ஊராரும் உலகோரும் ஒருகால் - உன்றன்
திருக்கோயில் வலம்வந்தே நின்றால் - கொடிய
தீராத நோயெல்லாம் தீர்த்து — என்றும்
திரவியனாய் வாழ்ந்திடவே வைப்பீர் - அம்மா

(சிங்கார...............) 5

28. காரேறு வீயோடை முகில்கள் - நன்றாய்க்
கருக்கட்டி அருளாகப் பொழிய - இங்கே
பேராரும் பயிராக வளர்ந்தே — மக்கள்
பெருமாட்டி திருநோக்கால் உயர்வர் - என்றும்

(சிங்கார ..............) 6

## 9. வட்டுநகர் வீயோடை முத்துமாரி

29. வட்டுநகர் வீயோடை முத்துமாரித் தாயாரே
வந்தெம்மைக் காத்திடுவீர் வண்ணரூபி நாயகியே
இட்டமுடன் சிவனாரின் இடப்பாகம் வீற்றிருந்தே
இன்னலெமை அணுகாமல் ஈசுவரி ஓம்பிடுவீர்
(வட்டுநகர்.............) 1

30. கட்டறுத்து எமையாளும் கொற்றவையே அம்பிகையே
காலமெல்லாம் புரந்து நிற்கும் கங்காளி அம்மாவே
ஆடகச்சீர் மணிக்குன்றே அயிராணி ஆத்தாளே
ஆதரித்தே வாழ்வளிக்கும் ஆதிபரா சக்தி நீயே
(வட்டுநகர்.............) 2

31. பூங்குயில்கள் பொலிவுடனே திருப்பள்ளி யெழுச்சிபாட
பூவிருந்தே வண்டினங்கள் பூசறுத்து வேதமோத
பாங்கிருந்தே சேவல்கள் கட்டியந்தான் இயம்பிடவே
பானுகோடி திரண்டதென்னப் போந்திடுவாள் ஆத்தாளே
(வட்டுநகர்.............) 3

32. வீயோடைச் சோலையிலே விளங்குமெழில் இலுப்பையிலே
வண்டினங்கள் தேனாடி விளையாடிக் கூடுகட்டும்
தாயார்க்குத் தேனாலே அபிஷேகம் செய்து நிற்கும்
தென்றலங்கே சிவமணத்தைத் தெரிவித்தே வீசிவரும்
(வட்டுநகர்.............) 4

33. விளங்குமணிப் பசும்பொன்னே வித்தகியே விமலை நீயும்
வீரமொடு கல்வி செல்வம் விளங்கிடவே அருள்புரிவீர்
துளங்குமணிச் சிலம்பொலிக்கும் தூயவுந்தன் திருவடியில்
துன்பு செயும் பிசாசங்கள் அதுகேட்டுச் துஞ்சிடுமே
(வட்டுநகர்.............) 5

34. சின்னமுத்துப் பொக்களிப்பான் சிரங்குசொறி பெரியம்மை
சொல்லரிய நோய்களெல்லாம் தீர்த்திடுவாள் சாம்பவியே
பன்னநல்ல கூத்தினையும் பார்த்திட்டே பராபரையும்
பாரிலுள்ள இன்பமெல்லாம் பெற்றிடவே செய்திடுவாள்
(வட்டுநகர்.............) 6



கலைநகர் காங்கேயன் வளவுறை

## 10. அருள்மிகு முத்துமாரி அம்மன்

35. கலைநகர் காங்கேயன் வளவினிலே – அருள்
மலையென வீற்றிருப்பாள் முத்துமாரி
கலையெனும் கார்முகில்கள் அதன்குவட்டில் - தங்கக்
காலமெலாம் மாரிமழை பொழிந்திடுவாள்

(கலைநகர்.............) 1

36. மண்ணிட மெங்கணுமே பெய்தமாரி – ஆறாய்
நண்ணிட மக்களதிற் றிளைத்திடுவார்
எண்ணிட அரியதாய கலைகளெலாம் - இங்கே
வண்ணமாய் இவ்வாறே விளங்கிடுமே

(கலைநகர்.............) 2

37. இயற்கையைப் படைத்திட்ட இறைவியிவள் - உயிர்
இயங்கிட ஐம்பூதம் தந்தாளே
வியப்புறு தாயெங்கள் முத்துமாரி – நல்ல
நயப்பொடு கேட்பதெலாம் நல்கிடுவாள்


(கலைநகர்.............) 3

38. கிருட்டின ரெனுமெங்கள் குலமுதல்வர் - வேண்ட
அருத்தியோ டிங்குவந்து அமர்ந்தனளே
வருத்திடும் பிணியெலாந் தீர்த்திடுவாள் - பெரும்
அருட்புகழ் கொண்ட அம்மா முத்துமாரி

(கலைநகர்............) 4

39. மனமும் உருகிநாமும் துதித்திடவே – மாரி
தினமும் திருவாடல் செய்திடுவாள்
தனமும் வீரமொடு ஞானமெல்லாம் - அம்மா
நிலைபெற வந்தோடி அருள்பொழிவாள்

(கலைநகர் ...........) 5



# 11.நல்லைக் கந்தன்

40. சீர்கொண்ட திருநல்லை அருட்சோதி உருவாகிச்
சிறப்பொடு மெமதின முயவே
செங்கதிர்சே ரிலங்குமொளி யறுதிங்கள் வதனங்கள்
ஈசா னம்முத லாறும்
பேர்கொண்ட முகமாகப் பிறங்குமெழிற் பெருமானே
பக்தர்க் கருளு பதியே
பழந்தமிழ்நற் புலவோர்கள் தமிழெனவே நினையுந்தான்
பற்றோடு புகழ்ந்து போற்றப்
பார்கொண்ட பல்லுலகும் பணிந்தேத்துஞ் செம்மொழியாய்ப்
படிமிசைத் தமிழை வைத்தாய்
பேறுபல ஈந்தருளும் பரம்பொருளே நல்லைவாசா
பரம குருசா மியையா
கார்கொண்ட கொடியவிருட் சமருந்தான் குருதியமழ
கொட்டி யாறாகப் பெருகுதே
கணப்பொழுதி லதைவிரட்டி யெமைக்காக்க ரதமேறி
இவர்ந்தருள் புரிவாய் கோவே

வட்டூர் வெப்பட்டி யொல்லை அருள்மிகு

## 12. செந்தில் முருகையா

- பல்லவி -

வந்தனை செய்திடுவோம் - வேலவனை
வந்தனை செய்திடுவோம்.

-அநுபல்லவி –

வரமீயும் வட்டூர் வெப்பட்டி யொல்லை
முருகையனைச் செந்தில் ஆண்டவனை நித்தம் (வந்தனை ....)

-சரணம்-

41. சோலையில் வண்டினம் தேனாடி நின்றிட
காலையிற் கதிரவன் கடலாடி வந்திட
(வந்தனை செய்திடுவோம்.)

42. மலையாடி முருகையன் அருளாடி வருவான்
அலைபாயும் அடியவர்க்கு அருளமு தீவான்
(வந்தனை செய்திடுவோம்) 1

43. பூதி சிவ சின்னம் பொலிந்திட வைத்தே
ஆதியில் வட்டூரை ஆண்ட அரசனை
(வந்தனை செய்திடுவோம்) 2

44. திருவருள் தம்பர்க்குச் சுரந்திட எண்ணிக்
குருவாகக் கனவிலே தோன்றி அருளி
வருகவெனச் செந்தூர்க் கழைத்தே வெள்ளி
அரியதொரு வேலாய் அவர்கரத் தமர்ந்தானை
(வந்தனை செய்திடுவோம்.) 3

45. மாத வெள்ளியில் மகேஸ்வர பூசை
நாத மணியுடன் நாள்தொறும் பூசை
பூத கணங்களின் நடுநிசிப் பூசை
ஓது பலபூசை காணும் ஐயனை
(வந்தனை செய்திடுவோம்) 4

46. பட்டினி கிடந்து பாவையர் நோற்கச்
சட்டியில் வைத்து அகப்பையில் கொடுப்பீர்
மட்டிலா இன்பம் மக்கள் பெறுவர்
செட்டியார் செய்யும் ஆடலைக் காண
(வந்தனை செய்திடுவோம்) 5

47. தீயோ ராயினும் திருத்தலம் சேர்ந்தால்
நாயகன் முருகன் நல்லவ ராக்கி
தூய நெறியினில் தொடரச் செய்வான்
தாயினும் நல்ல தலைவன் தானே
(வந்தனை செய்திடுவோம்) 6

உ



# 13. எமையாளும் ஐயன்

-எடுப்பு -

ஐயன் இவனேயாம் எமையாளும்
ஐயன் இவனேயாம்

-தொகுப்பு -

படியில் மயிலில் அழகு பொலியப்
பறந்து அடியர் துயரு மகற்றும் (ஐயன்...)

-முடிப்பு -

48. வட்டூர் காக்குமையன் - வெப்பட்டி
ஒல்லை வாழும் வேலன்
சிட்ட பரிபாலனஞ் - செய்யுமெங்கள்
செந்தூர் முருகனவன்

விண்ணகத் தேவரும்
மண்ணகத் தோர்களும்
எண்ணியே நித்தமும்
பொன்னெனப் போற்றிடும்

(ஐயன்...) 1

49. தீதெலாம் தீர்க்குமையன் - தெய்வவள்ளி
தேவியர் கூடுங் காந்தன்
ஓதிடும் வேதத்தின் - உட்பொருள்
உண்மை உணர்த்தும் ஐயன்

செந்தமிழ் மக்களும்
அந்தர வாசியும்
புந்தியில் வைத்தடி
சந்ததம் போற்றிடும்

(ஐயன்....) 2

50. சிட்டரெம் தம்பர் மகான் - செய்தவத்தால்
செந்திப் பதிவாழ் ஐயன்
இட்டமாய் அவர்கையிலே வெள்ளிவேலாய்
இருந்து தவழ்ந்த ஐயன்

நற்றவத் தோர்களும்
கற்றவல் லார்களும்
வெற்றியும் கண்டிடப்
பற்றுடன் வேண்டிடும்

(ஐயன்....) 3

51. ஆதியில் வட்டூரில் - வந்தமர்ந்தான்
வெப்பட்டி யொல்லை வேலன்
சோதியுட் சோதியாய் - நின்றருள்வான்
சொக்கன் தந்த சுதன்

அச்சமும் போக்கியே
அவலமும் நீக்கியே
நிச்சயம் நன்மைகள்
நின்றுமே நல்கிடும்

(ஐயன்....) 4

உ



## வட்டுக்கோட்டை வன்னியன் தோட்டம்

# 14. அருள்மிகு சின்னக்கதிர்காமத்தையன்

-எடுப்பு-

சின்னக் கதிர்காமத் தையன் திருவடியை
எண்ணி நீ நடமனமே – தினமும்
சின்னக் கதிர்காமத் தையன் திருவடியை
எண்ணிநீ நடமனமே

-தொடுப்பு-

வண்ண மயிலேறி வந்து விளையாடி
வாரி வழங்குமருள் வள்ளல் சிவசுதன்

(சின்னக்..............)

## -முடிப்பு-

52. வந்தியின் பிட்டுக்காய் வந்த பெருமானார்
தந்த குருசாமித் தலைவன் எங்கள்
செந்தமிழ்க் கந்தனைநாம் வந்தனை செய்திட்டால்
சந்ததம் எமைக் காப்பான் சண்முகன் துய்யன்

(சின்னக்..............) 1

53. சிட்டனாம் சின்னட்டியர் வேண்ட வட்டூரில்
வன்னியன் தோட்டத்தே யுற்றீர் ஐயா
செட்டிநீ இங்கு வந்தே செய்த திருஆடல்
செப்புதற் கெளிதாமோ செவ்வேட் பெருமான்

(சின்னக்..............) 2

54. காவடிக் கந்தனென்றும் கருணைக் கடலென்றும்
சேவடி தொழுதடியார் சேவித் திடவே நீ
பூவடி எடுத்துவைத்தே பூமியில் அருள் பொழிவாய்
தாவடி புரிந்திட்டே சூரனைத் தடித்தகோவே

(சின்னக்..............) 3

55. சரவணப் பொய்கையிலே கார்த்திகை மாதர்கள்
அரவணைத் திடவே ஐயாநீ அருள் சுரந்தீர்
விரவுபுகழ் கதிர்கா மத்தில் வெற்றிவேலர்
பரவிடத் தங்கவேலாய் கரதலத் தமர்ந்தவேலன்

(சின்னக்..............) 4

56. நல்லருள் மலையருவி மக்களாம் பயிரிடையே
சொல்லரும் வளம்பெருக்கிச் சுகத்தொடு கலைசெல்வம்
கல்வியென வெல்லாம் கடலெனத் தந்து வட்டூர்
வல்லமை பெற்றுவாழ வழியினை நாளும் காட்டும்

(சின்னக்..............) 5

# 15. வைரவக் கடவுள்

**பல்லவி**

வித்தகன் ஆடல் காண வாரீர் - எங்கள்
முத்தன் கபாலி முடுவல் சேனையன்
வித்தகன் ஆடல் காண வாரீர்
(வித்தகன்..........)

**அநுபல்லவி**

ஞாளிமீ திவர்ந்தே ஞாலங் காக்கும்
ஊழி முதல்வன் காளி மைந்தன்
(வித்தகன்..........) 1

57. தாய் போல் இருப்பான் தந்தைபோல் ஆவான்
தூயார் உள்ளக் கோயிலில் உறைவான்
நோயும் பிணியும் நெருங்கா வண்ணம்
சேயெமைக் காப்பான் சித்தன் ஐயன்
(வித்தகன்..........) 2

58. செய்யுந் தொழிலும் ஜெயம் பெற அருள்வான்
வையம் மெச்சிட வாழ்வுந் தருவான்
ஐய! என்று அழைத்தால் வடுகன்
கையில் சூலங் கொண்டு காப்பான்
(வித்தகன்...... ....) 3

59. தங்கமேனி தெரியா வண்ணம்
எங்கள் வடுகன் கஞ்சுகந் தரிப்பான்
பொங்கல் வடையொடு பெருமடை பூசை
மங்கல மாக மகிழ்ந்து ஏற்கும்
(வித்தகன்.........) 4

60. உலகெலாந் தானாய் ஒளிர்வாய் போற்றி
அலகிலா இன்பம் அளிப்பாய் போற்றி
நிலவுல கினிலே நிலைத்திட நன்மைகள்
மலரடி யிணைநாம் வாழ்த்தி வணங்கும்
(வித்தகன்..........) 5

வட்டூர் புயங்கொல்லை

## 16. அருள்மிகு முருக ஞான வைரவர்

- பல்லவி-

ஞான வைரவரே நங்கள் பெருமான் - வட்டூர்
ஞான வைரவரே நங்கள் பெருமான்

-அநுபல்லவி-

கான மயிலேறுங் கந்தன் சோதரன்
வானவர் போற்றிடும் சுவான வாகனன்

சரணம்

61. வட்டு மாநகர் வான்பதிப் புயங்கொல்லை
வளமார் முருகர் வணங்கி வேண்டிடவே
இட்டமாய் அமர்ந்து இன்னருள் சொரிந்திட்டே
இருளை அகற்றி இரவியாய் இலங்கிடுமெம்

(ஞானவைரவரே......) 1

62. பன்னரும் நோய்களும் பயமும் பீடையும்
துன்ப நிலையொடு சோர்வும் வறுமையும்
உன்றன் திருப்பெயர் உரைத்திட ஒருகால்நீ
வந்தே அகற்றி அருளும் மூர்த்தியெம்

(ஞானவைரவரே......) 2

63. குல தெய்வமாகக் குலவி இங்கிருந்தே
பலஅரு ளாடல் பாங்குடன் இயற்றிநீயும்
நலமுடன் அடியர் நிலமிசை வாழநல்ல
நிலையினை நாளும் நின்று நல்கிடுமெம்

(ஞானவைரவரே......) 3

வட்டூர் பிராட்டிவளவு

# 17. அருள்மிகு ஞான வைரவர்

பல்லவி

பரமனை மதித்திடாப் பிரமர்க்குப் படிப்பித்த
ஒருவனை நினைமனமே – எங்கள்
வடுகனை நினை மனமே

அநுபல்லவி

பூஞ்சோலை வட்டூர்ப் பிராட்டிவளவமர்ந்தே
தீஞ்சுவை அருட்கனி தந்திடும் ஐயன்
(பரமனை.......)

சரணம்

64. எட்டுத் திக்கும் ஏத்திப் போற்றிடும்
சிட்டர் வேலு செய்த தளியுள்
இட்டமாய் இருந்து இன்னருள் சுரக்கும்
மட்டிலாப் பேறு மக்களுக் கீயும்
(பரமனை.....) 1

65. பில்லி சூனியம் பிசாச மொடுபிணி
எல்லையிற் கண்டால் படிமத் தானாய்
பல்லைக் கடித்துப் பிரம்பினை எடுத்து
வல்லையிற் துரத்தி வாழநாம் வைக்கும்
(பரமனை.....) 2

65. உருவாய் அருவாய் உலவி எங்கும்
இருளை அகற்றி ஒளியை ஈவான்
குருவாய் வந்து குறைகள் போக்கித்
தருவான் திருவும் கல்வியுஞ் சீரும்
(பரமனை.....) 3

## சித்தன்கேணி கம்பம்புலோ
# 18. அருள்மிகு ஞானவைரவசுவாமி

-பல்லவி-

கலைநகர் சித்தன்கேணி கம்பம்புலோ வைரவரே
காலமெலாம் வீற்றிருந்தே கலையினைநீ காத்திடுவீர்

-அநுபல்லவி-

மலைதொறும் ஆடிவரும் மயிலூர்தி சோதரன் நீ
மக்களையும் முன்னின்று காப்பதிலே மன்னவன் நீ

-சரணம்-

67. நிலமீதில் நின்னடியார் நித்தலுமுன் திருநாமம்
நின்றுரைக்க அவர்வாழ நீவந்து அருள்பொழிவாய்
குலமோங்க வந்தமர்ந்தாய் குறைவின்றி வாழ்கின்றோம்
இலையென்ற சொற்கேது இடமிங்கே நின்னருளால்
(கலைநகர்.....) – 1-

68. புலம்பெயர்ந்தே போனோரும் பூரிப்பாய் இருந்திடவே
நலமெல்லாம் செய்கின்றாய் நாளெல்லாம் நினைந்திட்டே
தலமோங்கு கம்பம்புலோ தயாநிதியே வடுகநாதா
தாழ்ந்துந்தன் திருவடித்தா மரையினைநாம் துதித்திடுவோம்
(கலைநகர்.....) – 2

69. பொன்னுலகோர் அனுதினமும் பூக்கொண்டு துதிசெயவே
செந்நெல்சேர் கலைநகர் சித்தன்கேணி சேர்ந்திடுவார்
மன்னவனெம் கம்பம்புலோ மாமணியின் திருத்தாளில்
மகிழ்வுடனே பணிந்து சாத்தி மாண்பயனும் துய்த்திடுவார்
(கலைநகர்......) – 3-

70. அன்னவர்தம் பாரிசாதப் பூக்களிங்கே அடைவதனால்
விண்ணுலகம் போன்றெங்கள் கலைநகரும் விளங்கிடுமால்
அன்படியார் கேட்டிந்த ஆலயத்தில் வந்து நல்ல
ஆரருளும் பெற்றுப்பே ரானந்தம் அடைவாரே
(கலைநகர்......) – 4-

## வட்டுக்கோட்டை மணியன்தோட்டம்

# 19. அருள்மிகு வீரபத்திரர்

- பல்லவி -

ஆயிரம் முகத்தினில் அனற்பொறி பறந்திட
பாயிருள் போக்கிடப் பத்திரர் போந்தார் - வீரர்

- அநுபல்லவி -

மாயவன் சக்கரம் விழுங்கிய மன்னவன்
தூயதோர் மணியன் தோட்டத்தே அமர்ந்தான்
(ஆயிர.......) 1

- சரணம் -

71. வட்டுமா நகரின் வளந்தரு கற்பகம்
வீற்றிருந் தருட்கனி வாரி வழங்கிட
மட்டிலா அக்கனி மக்களும் பெற்று
மகிழ்ச்சி பொங்கிட மண்ணில் இருந்திட
(ஆயிர......) 2

72. ஆதவ னெனவே அருட்கதிர் பரப்பி
ஆணவம் முதலாய்த் தீக்குணம் அகற்றி
ஓதிடும் நல்ல ஒளிதனை வழங்கி
ஓம்பிடும் எங்கள் ஒப்பிலா மூர்த்தி
(ஆயிர......) 3

73. கொற்றவி காளி கூட அமர்ந்திட
குதூகலம் கொண்டு கருணைக் கடலாய்
அற்புதா நின்றுநீ ஆட்சி செலுத்திட
அடியவர் அருவினை அகன்றிடும் நித்தம்
(ஆயிர......) 4

74. சிவனார் நிலத்திற் சடையினை மோத
நவமார் வீரபத் திராநீ தோன்றித்
தவறு செய்த தக்கன் தலையினைத்
தடிந்தருள் புரிந்தாய் தலைவா உன்தன்
(ஆயிர......) 5



## வட்டுக்கோட்டை கணவன் தோட்டம்
# 20. காளியன் ஒல்லை மாகாளியம்மை

பல்லவி

எல்லோரும் பாடித் தொழுவோம் - காளியை
எல்லோரும் பாடித் தொழுவோம்

அனுபல்லவி

வல்லாளைச் சாமுண்டி வீரியினை வடடூர்வாழ்
கல்லாரக் கண்ணியினை கணவன் தோட்டத்தாளை
(எல்லோரும்.....)

சரணம்

75. கையில் உடுக்கைவாள் - ஏந்திய
கங்கா ளித்தாய் எமக்கு
செய்ய வழிவகுத்தே
செல்வநற் சீரெல்லாம்
உய்ய உவந்தளிக்கும்
ஒப்பிலாச் சூலியை
(எல்லோரும்.........)1

76. மல்லல் சேர்முருகர் - வேண்டிட
மாண்பயன் ஈந்துளம்
அல்லல் அறுத்தருளி
ஆனந்தம் நல்கிடும்
நல்லாள் அருள்பொழியும்
காளியன் ஒல்லையாளை
(எல்லோரும்..........) 2

## வட்டுக்கோட்டை மேற்கு

# 21. அருள்மிகு பூதராசர்

-பல்லவி -

பூத ராசரே பூத ராசரே
பூதப் படையுடை பூத ராசரே

அநுபல்லவி

வட்டுநகர் மேற்கினிலே வந்தமர்ந்தீர்
வையத்துள் வாழ்வாங்கு நாமும் வாழ

(பூத........)

சரணம்

77. கிளுவைமர நீழலிலே கோயில் கொண்டீர்
அளப்பரிய வரமெல்லாம் அருள எமக்கு
இளநகையுன் மதிமுகத்தே வந்து சிந்த
களங்கமெலாம் கதிர்காணும் பனிபோ லேகும்

(பூத........) 1

78. கரத்தினிலே தண்டேந்தி ஊரைக் காப்பீர்
பரம்பொருளாய் விளங்குமெங்கள் பூத வீரா
நிரம்பிடவுன் அடியவரின் நெஞ்சம் நாளும்
வரமருள்வீர் வீரமொடு கல்வி செல்வம்

(பூத......) 2

79. கண்கண்ட தெய்வமாகக் காலமெல்லாம்
மண்மீதில் அருள்பொழியும் பூத ராசா
பண்டவினை பாறிடவே செய்து உன்னை
அண்டினரை ஆதரிப்பாய் அண்ட வாணா

(பூத......) 3

## சூரன்போர்க் காட்சி

சூரன் ஆட்டுவோம் - நாங்கள்
சூரன் ஆட்டுவோம்

1. சுற்றி வந்து எறிந்து ஏந்திச்
சூரன் ஆட்டுவோம் - நாங்கள்
சூரன் ஆட்டுவோம்
பற்றி ரீனோடு ஏறி நின்று
பாலன் ஆட்டுவான் - மேலே
பாலன் ஆட்டுவான்
பற்றிக் கொம்பின் தலைபி டித்தே
பரமன் காட்டுவான் - வழி
பரமன் காட்டுவான்
வெற்றி வேலர் மயிலில் ஏறி
வலமாய் வருவரே — வீதி
வலமாய் வருவரே (சூரன்....) 1

2. மண்டி யிட்டு எறிந்து ஏந்தப்
பாலன் மாற்றுவான் - ஆயுதம்
பாலன் மாற்றுவான்
மிண்டி யென்று பரமன் கூற
மின்னல் வேகமாய் - பாலன்
மின்னல் வேகமாய்
துண்டஞ் செய்து சூரன் தலையைத்
தொங்கக் காட்டுவான் - பாலன்
தொங்கக் காட்டுவான்
பண்டை முன்னோர் தந்த ஆட்டம்
பயின்று ஆட்டுவோம் - நன்கு
பயின்று ஆட்டுவோம் (சூரன்....) 2

3. வல்லண்ணாவி வேலன் அங்கே
தாளம் போடுவான் - நின்று
தாளம் போடுவான்
சொல்லரிய பாட்டெ டுத்தே
சொக்கன் பாடுவான் - சேர்ந்து
சொக்கன் பாடுவான்
மெல்ல மத்தளம் எடுத்து வைத்து
ராசன் கொட்டுவான் - நட
ராசன் கொட்டுவான்
நல்ல வல்ல கலைகள் இங்கே
நாங்கள் காணலாம் - போர்
அன்று காணலாம். (சூரன்.......) 3

## 2. உயிரைப் படைத்த பெருமான்

ஆட்டுக்கடா ஆட்டுக்கடா
அழகு சொல்லு மாட்டுக்கடா
4. வாட்ட சாட்ட மான தோற்றம்
வடித்தெ டுத்த வுடலி னேற்றம்
நாட்ட மோடு வெங்க ளப்பா
நாளும் பொழுதும் வளர்க்கும்
(ஆட்டு........) 1

5. அன்வர் தாடி அதனின் தாடி
அன்ரன் மீசை குத்தும் கொம்பு
பன்னும் வெள்ளைப் பூதி பொட்டு
பார்க்க வாரீர் முகத்தின் கண்ணே
(ஆட்டு........) 2

6. துள்ளித் துள்ளி எழுந்து பாயும்
தூரத் துரத்தி எம்மை முட்டும்
அள்ளித் தீனும் போட்டு விட்டால்
அசைந்தே உரோஞ்சி அன்பு காட்டும்
(ஆட்டு........) 3

7. பாட்டன் பாட்டி நேர்த்தி வைத்துப்
பாரில் நானும் பிறந்தே னென்று
காட்டு வைர கோயிற் காகக்
கட்டி நாமும் வளர்க்கு மாடு
(ஆட்டு........) 4

8. அன்பு காட்டி உணவு ஊட்டி
ஆசை பொங்க அணைத்தெ டுத்தே
இன்பம் எழவே ஆர மிட்டு
இறைவன் முன்னே பலிகொ டுக்க
மன்னு முயிரைப் படைத்த கடவுள்
மகிழு வாரோ? வரமீ வாரோ?
இன்னு மிந்த மூடக் கொள்கை
ஏனோ இங்கே இருக்கு தையோ!
(ஆட்டு........) 5

# 3. தைப்பொங்கல்

9. பொங்கலோ பொங்கல் பொங்கலடா – புதுப்
பானையிற் பொங்கும் பொங்கலடா
எங்களின் தையும் பிறந்து விட்டா – ளொண
ஏத்திநாம் போற்றும் பொங்கலடா
செங்கதிர்ச் செல்வன் உத்தரமாய் - உலா
சென்றிடு மந்த வேளையிலே
மங்கல மாகத் தமிழர்கள் - கூடி
மகிழ்ந்து பொங்கும் பொங்கலடா 1

10. காலையில் நாமும் எழுந்திடுவோம் - நல்ல
கூவலின் நீரிற் குளித்திடுவோம்
சோலையில் வாச மலர்பறிப்போம் - அதிற்
செப்பமாய் மாலை தொடுத்திடுவோம்
சீலமாய் முற்றம் பெருக்கிடுவோம் - பசுஞ்
சாணமெ டுத்து மெழுகிடுவோம்
கோலமு மிட்டு அடுப்புடனே – நிறை
கும்பமு முள்ளே வைத்திடுவோம் 2

11. பானையின் வட்டக் கழுத்தினிலே – சுற்றிப்
பாங்குற மஞ்சள் இஞ்சியிலை
ஆனவை சேர்த்து நாம் கட்டிடுவோம் - அதில்
அளவாய் நீரு மெடுத்திடுவோம்
ஈனமில் லாத அடுப்பிலதை – மெள்ள
ஏற்றியே பாலுஞ் சேர்த்திடுவோம்
சீனரின் பெட்டி வெடியெடுத்தே – ஒன்று
சீக்கிரம் எட்டப் போட்டிவோம் 3

12. மூட்டிய தீயும் முழாசிடவே – பாலும்
முறுகிப் பொங்கிச் சரித்திடுமே
தீட்டிய பச்சை அரிசிதனைப் - பின்னர்
திப்பியப் பானையிற் போட்டிடுவோம்.
கூட்டுவோம் தேன்நெய் சர்க்கரையும் - மற்றும்
கருப்பஞ் சாறும் முந்திரியும்
நாட்டினில் நாளும் நல்லவண்ணம் - வாழ
நாடியே நாமும் பொங்கிடுவோம் 4

13. தொந்தர வின்றிப் பொங்கிடவே – நாமும்
தொந்தி யப்பனை வேண்டுவோமே
செந்திரு அல்லி சிரித்திடுவாள் - மெள்ளச்
செக்கரும் வானில் தோன்றிடுமால்
சுந்தர ஆடி ஒன்றெடுப்போம் - அதைச்
செவ்வனே கும்பத் தடிவைப்போம்
இந்திரி திக்கில் உதித்துவரும் - எழில்
இரவியின் பிம்பந் தோன்றிடவே 5

14. பதமாய்ப் பொங்கல் ஆனபின்பே – அந்தப்
பானையைக் கீழே இறக்கிடுவோம்
ஏதமில் வாழை இலையெடுத்து – அதில்
இன்புடன் பொங்கல் படைத்திடுவோம்
விதம்வித மான கனிவகைகள் - தேடி
வேண்டிய வாறு பரப்பிடுவோம்
உதவி செய்திடு மாதவனும் - அதை
உவந்தே உண்டு உலாதரவே 6

15. சூடமும் ஏற்றித் தேவாரம் - பாடி
சூழவே நின்று கும்பிடுவோம்
ஓடுக பீடை பிணிகளெல்லாம் - என
ஓர்கலன் தன்னில் எடுத்துவைத்த
ஈடிலாப பொங்கல் நீரினையும் - வீட்டில்
எங்கணும் சுற்றித் தெளித்திடுவோம்
பீடுடைப் படையலோ ர்பங்கெ டுத்தே
பீடையும் போகக் கழித்திடுவோம் 7

16. அன்புடன் அந்த அமுதெடுத்தே – உற்ற
அயலவர் நண்பர் உறவினர்க்கும்
இன்புடன் ஈந்தே வாழ்திடுவோம் - எங்கள்
இனிய பொங்கல் வாழ்த்தெனவே
உன்னத விந்த விழாவன்றோ – தமிழ்
உலகோர் ஆண்டும் பிறந்திடுமே
என்றுநம் சங்கச் சான்றோரும் - இதை
எடுத்து இயம்பிப் போந்தனரே 8

# 4. விடியல் கொண்டு வாராயோ

17. நித்தம் ஒற்றுமை நிலைத்திட்டால்
நிம்மதிக்கேது பஞ்சமிங்கே
பித்தம் பிடித்து ஊர்தோறும்
பிதற்றி மக்கள் திரிவாரோ
சத்தம் போட்டுச் சமாதானம்
சாகடிக்கச் செய்யாமல்
வித்தகி தைநீ பிறந்தெமக்கும்
விடியல் கொண்டு வாராயோ 1

18. உத்தமர் என்று உரைப்போரும்
உதவார் நாட்டின் ஒற்றுமைக்கு
எத்த ராக நின்றுசிலர்
எங்கள் வாழ்வைச் சிதைக்கின்றார்
சுத்தஞ் செய்து பண்படுத்திச்
சுகமாய் மண்ணில் வாழ்ந்திடவே
வித்தகி தைநீ பிறந்தெமக்கும்
விடியல் கொண்டு வாராயோ 2

19. பஞ்சம் வந்து சேர்ந்ததினால்
பானையிற் சோறும் இல்லைஐயோ
பிஞ்சு உள்ளப் பாலருந்தான்
படிப்பி லேதும் நாட்டமின்றிக்
கஞ்சியோ கூழோ குடித்திடவே
கஸ்டப் பட்டுக் கலங்கின்றார்
அஞ்சுகம் தைநீ பிறந்தெமக்கும்
ஆறுதல் கொண்டு வாராயோ 3

20. அம்மையே ஒருமைநீ கொண்டு வந்தால்
அன்பும் அறமும் பெருகாதோ
நிம்மதி யாக நாமுமிங்கே
நின்று மூச்சு விட்டுடோமோ
நம்மையே தேடி உறவுகளும்
நாட்டில் வந்து குவியாதோ
செம்மையாய் அம்மா பிறந்திடுவீர்
சிரித்து நாமும் வாழ்ந்திடவே 4





## 05. பாதகர் என்றே பகர்

21. துன்பமெலா மின்பமெனத் தூக்கிச் சுமந்திட்டே
நன்றுபல செய்தநம் பெற்றோரை - இன்று
முதியோர் மனையில் முனைப்புடன் சேர்போர்
இதயமிலார் என்றே இயம்பு

-1-

22. கட்டிய வீட்டோடு வெட்டிய கூவலெனப்
பெட்புடனே வாழ்ந்து வந்தெம் பெற்றோரை– திட்டந்தான்
போட்டே முதியோர் மனையில் விட்டிடுதல்
காட்டுநரி நீர்மையென்றே காண்

-2-

23. மடிநம் கனத்திடவே மாண்பு தந்தெம் பெற்றோரை
படிமேற் சிலருந்தான் பாரார் - முடிவில்
அவர்களையும் மூத்தோர் அகமதிற் சேர்ப்பின்
அவமானம் யார்க்கென் றறை

-3-

24. கண்ணப்பன் அன்பதுபோல் காதாலாய்க் காத்திட்டே
வண்ணமாய் வாழவைத்த நம்பெற்றோர் - மண்ணகத்தில்
எண்ணி முதியோர் மனைதாமும் ஏகுதல்
நன்றோ மகார்க்கு நவில்

-4-

25. பாடுபட்டுத் தேடிப் பணத்தைத்தம் மக்களுக்காய்
நாடிக் குவித்திட்ட பெற்றோரை - "ஓடிப்போய்
மூத்தோர் மனையிரு" என்றுரைக்கும் மக்களைத்தான்
பாதகர் என்றே பகர்

-5-

## 6. வாழ்வியல்

26. நுண்மான் நுழைபுல முள்ளா னதன்வழி
நண்ணா னெனினகும் நாடு 1-

27. மனம்வாக் கொடுகாயம் மூன்றும் முறையே
கனங்காத் திடல்வேண்டும் காண் 2-

28. மலரது வாழ்க்கை மலர்ந்தொருநா ளேனும்
நிலைக்கு மதன்தேனும் நின்று 3

29. பழுத்த கனிபிஞ்சும் பூக்காயும் போலே
இழுத்திடும் வாழ்வின் இயல்பு 4

30. பலகோடி யுன்செல்வம் பாறிடினும் காக்க
நிலமீ தொருவனுயிர் நின்று 5-

31. வையத்துள் வாழ்க்கை மதியின் வண்ணமென
ஐயமின்றி ஈங்கண் அறை 6

32. கதிரவனைக் கண்டே களிக்கும் கமலம்
பதிவிரதை யென்றே பகர் 7

33. வளரும் பிறைமதிபோல் வந்துயர்ந்த ஞானம்
தளரும் வழியுதவுந் தான் 8

34. ஒன்றாய் இருந்து ஒல்லுநர்போல் ஒன்னலர்
நின்றுகேடு செய்வர் நினைந்து

9

35. தக்க வொருவன் தலைவனாய்ப் புக்கிடவே
மக்கடாம் வாழ்வர் மகிழ்ந்து 10



## நூலாசிரியர் பற்றி...............

**நூல் ஆக்கம்**

நாகலிங்கம் புவனசுந்தரம்

**முகவரி:**

'தெய்வ லிங்க வாசம்"
சிவபுரம்
வட்டுக்கோட்டை.

**தொழில்:** முன்னாள் முதுநிலை வீதிப் பரிசோதகர்
(இ.போ.ச.)
இயக்குநர்
(அண்ணாவியார் நாகலிங்கம் கலைப்பள்ளி)
ஆங்கில ஆசிரியர்

**பிற ஆக்கங்கள்**

முருகம்மை நாட்டுக்கூத்து
(வட்டுக்கோட்டை மோடி)
கவிதைக்கலசம்
(பல்வகைப் பாடல்கள்)
வெப்பட்டியொல்லை -
செந்தில் முருகையா காதை

**பெற்ற பட்டங்கள்**

சந்தக் கவி
கலைவாரிதி
கலாபூஷணம்